★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 66 வைகாசி 23 தமிழ் 4 இதழ் 111

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 5 6-84

# இலங்கை மனித உரிமைகள் பாதுகாப்பு ஸ்தாபனம்!

## சென்னையில் புதிய அமைப்பு

(சென்னை)

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதனை தடுக்கும் நோக்காக "இலங்கை மனித உரிமைகள் பாதுகாப்பு ஸ்தாபனம்" என்ற புதிய அமைப்பொன்று சென்னையில் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் முன்னாள் நீதிபதி வி. ஆர். கிருஷ்ணஐயர், இந்த அமைப்பின் தலைவராகவும், இந்திய அரசியல் சாசன நிபுணரும் பேராசிரியருமான கே. ராமராவ் உபதலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த அமைப்பைச் சென்னையில் திரு வி ஆர். கிருஸ்ன ஐயர் தொடக்கிவைத்துப்பேசுகையில் "இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதனை [illegible] தமிழர்கள் பெருமளவில் [illegible] இந்த நிலைமை [illegible] முன் மக்களுக்கு எடுத்துரைப்பதோடு இவ்வாறான மனித உரிமைகள் மீறப்படுவது குறித்தும் [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

# "உலகமும் நீதியும் நமது பக்கம்; எதற்கும் அச்சம் வேண்டாம்"

## நடப்பவை அனைத்தும் நன்மைக்கே என்கிறார் 'அமிர்'

(ஏ. வி. மாணிக்கம்)

"உலகம் எங்கள் பக்கம்; நீதியும் எங்கள் பக்கம்; எதற்கும் அஞ்சத் தேவையில்லை, இந்து - கிறிஸ்தவ - முஸ்லிம் ஒற்றுமையைக்கூட ஆண்டவன்; 'அவர்கள்' செய்யும் கொடுமைகள் - அனர்த்தங்கள் மூலம் ஏற்படுத்தியுள்ளான். நடப்பவைகள் எல்லாம் - நன்மைக்குத்தான். தமிழினம் வாழும்; நூலகம் வளரும்" என்று தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் எதிர்க்கட்சி முதல்வருமான திரு. அ. அமிர்தலிங்கம் நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ். பொது நூலகத்துக்கென புதிதாகக் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் ஒரு பகுதி நேற்று நண்பகல் திறந்துவைக்கப்பட்டது. நூலகக் கட்டிடப் பகுதி பூமாலைகளாலும் மாவிலைத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இத்திறப்பு விழாவில் திரு. அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினார்.

### அமிருக்கு வரவேற்பு

திரு அமிர்தலிங்கம் உரை நிகழ்த்துவதற்கு முன்னர் யாழ் மாநகர ஆணையாளர் திரு சி வி கே. சிவஞானம் மற்றும் நூலகக்குழு உறுப்பினர்கள், பகுதித்தலைவர்கள் ஆகியோரால் சம்பிரதாய முறைப்படி வரவேற்கப்பட்டு திறக்கப்பட்ட நூலகப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும் யாழ் ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையும் மங்கள விளக்கேற்றி வைத்தார்கள்.

பின்னர் திரு அமிர்தலிங்கம்

(8ம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு

# யாழ்ப்பாணத்தில் கண்டனக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் 'இஸ்ரேலிய நலன் காக்கும்' பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டதற்கு [illegible] [illegible] தெரிவிக்கும் [illegible] 7ம் திகதி பிற்பகல் யாழ் நகர

(8ம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கில் பரவலாக கூட்டங்கள் நடத்த முடிவு!

(யாழ்ப்பாணம்)

"அமெரிக்க தூதராலயத்தில் இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவு ஆரம்பிக்கப்படுவதை ஆட்சேபித்து, புரட்சிகர சோசலிச விடுதலை ஒன்றியம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கண்டனக்கூட்டங்களை நடத்தவிருக்கிறது"

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில், சமதி இயக்க அமைப்பாளர் திரு. பி கே. பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார். திரு. பாலசுப்பிரமணியம் மேலும் கூறியதாவது:

(8ம் பக்கம் பார்க்க)

# இந்திராவின் விசேட செய்தி; சத்வால் கையளித்தார்

## இந்திய உயர் அதிகாரி திடீர் விஜயம்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு விசேட செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த விசேட செய்தியை இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் எஸ் ஜே சத்வால் நேற்று மாலை இலங்கை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

இச்செய்தி பற்றிய விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லையெனினும் அண்மையில் இலங்கைப் பிரதமர் ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் இந்தியாவையும் இந்தியப் பிரதமரையும் கடுமையாகத் தாக்கிப் பேசியதன் மூலம் பாதிக்கப்பட்டுள்ள இருநாட்டு உறவுகள் பற்றிய செய்தியாக இருக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிலைமை இவ்வாறிருக்க இந்திய வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. எஸ் கே. பூட்டானி நேற்று திடீர்விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம்செய்தார்.

நேற்று முன்தினம் கொழும்பு வந்திருந்த திரு. பூட்டானி,

(8-ம் பக்கம் பார்க்க)

# ரூ. 4 லட்சம் தங்கம் கைப்பற்றப்பட்டது

(மன்னார்)

நான்கு லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை மன்னாரில் இராணுவ இரகசியப்பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இதுதொடர்பாக 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் நகை வியாபாரிகள். ஏனைய மூவரில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர்.

வெளிநாட்டுக்குக் கடத்தப்படுவதற்காக இத்தங்கம் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கருதப்படுகிறது.

## கண்டன சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க தூதராலயத்தில் இஸ்ரேல் நலன் காக்கும் பிரிவு நிறுவப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ் நகரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

சிவப்பு, கறுப்பு எழுத்துக்கொண்ட இச்சுவரொட்டிகளை [illegible] ஒட்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பரவலாக [illegible] இச்சுவரொட்டிகளைக் [illegible] [illegible] காணப்படுகிறது.

மங்களகரமான

# திறப்பு விழா

நித்தியகல்யாணி ஜுவல்லறி

இரத்தாஷி வருடம்

வைகாசி மாதம் புதன்கிழமை

24ந் திகதி [6-6-84]

காலை 6·31 — 7-12 மணிக்கு

ஊர்காவற்றுறை இலங்கை வங்கி முகாமையாளர்

திரு. வ இரத்தினசோதி

அவர்களால் திறந்துவைக்கப்படும்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

## நித்தியகல்யாணி ஜுவல்லறி

162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஸ்பிறே-நாட்டு மக்களின் ஊட்டம் மிகுந்த பாலுணவு.




# நாவுக்கு ருசியான உணவு சமைக்க லக்ஸ்பிறே

உங்கள் குடும்பத்துக்கு போஷாக்குணவு பரிமாறுங்கள். லக்ஸ்பிறேயின் நன்மையை முழுக்குடும்பத்துக்கும் வழங்குங்கள். சத்துக்களடங்கிய, ஆடை நிறைந்த இப்பால்மா, புதிய பசும்பாலின் ஊட்டச்சத்துக்களனைத்தையும் கொண்டது. நைதரசன் வாயுவினுல் அலசப்பட்டு மூன்றடுக்கு மென்றகட்டுப் பக்கட்டுக்களில் அடைக்கப்பட்ட லக்ஸ்பிறே பால்மா, உலகின் தலைசிறந்த பாற்பண்ணை தேசங்களில் இருந்து தருவிக்கப்படுகின்றது.

விலை - 500 கிராம் - ரூபா 26/-
250 கிராம் - ரூபா 14/50 சதம்.



உற்பத்தியில் முன்னணியில் திகழும் நாடுகளான நியூசீலாந்து, ஒல்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வரும் பால்மா.

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

